# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

# TNEB EMPLOYEES' FEDERATION NEWS

Volume - 7 Issue - 9 April 2025
மலர் - 7 இதழ் - 9 ஏப்ரல் 2025

Monthly Magazine
மாத இதழ்

Bilingual
Tamil & English

Price - Rs.10/-
விலை ரூ. 10/-

ஆசிரியர் : அ.சேக்கிழார்






## தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வெளியீடு


வருங்கால வைப்புநிதி நிர்வாகமே!
AITUC


SUVAIAGAM




தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி
எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
தூத்துக்குடி மின் பகிர்மானக் கிளை








தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
பதிவு எண் : 3600 / CNI
விருதுநகர் மின்பகிர்மான வட்டக்கிளை

**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 7 ✧ இதழ்-9 ✧ ஏப்ரல் 2025

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# அனைவருக்கும் தொழிலாளர் தின நல்வாழ்த்துகள்

**04.04.2025** அன்று மின்சார வாரியத் தலைவருடன் எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் பொதுக்குழு தீர்மானங்கள் மீது பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

சுமார் 2 மணி நேரத்திற்குமேல் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நமது 52 கோரிக்கைகளுக்கு வாரியத் தலைவர் அவர்கள் பதிலளித்தும், உரிய உத்தரவுகளை வெளியிடவும், கோப்புகளை அனுப்பிடவும், நிர்வாகக் கிளைக்கும், செயலகக் கிளைக்கும் தகுந்த உத்தரவிட்டுள்ளார். வாரியத் தலைவர் அவர்களுக்கும் தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அவர்களுக்கும், செயலகப் பிரிவு அலுவலர்களுக்கும் நன்றியை உரித்தாக்குவோம்.

பேச்சுவார்த்தையில் பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளது மட்டுமன்றி கோரிக்கையில் உள்ள நியாயத்தை வாரியத் தலைவர் அவர்கள் உணர்ந்து பதிலுரைத்தார் என்பதே மெய்யாகும்.

நிர்வாகப் பிரிவு, கணக்கீட்டு பிரிவு, கணக்குப் பிரிவு, பதவி உயர்வுகள், AE, TA உள்முகத் தேர்வு யாவும் ஒன்றன் பின் ஒன்றாக உத்தரவிடும் சூழல் உருவாகியுள்ளது.

மே 20 வேலை நிறுத்த ஆயத்த பணிகள் மத்திய தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வருகின்றன.

ஜுன் 26 வேலை நிறுத்தத்திற்காக NCCOEE அனைத்து மண்டலங்களிலும் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மின் கணக்கீட்டு பணியாளர்களுக்கு Mobile/Tab வாங்குவதற்கு ரூ. 10,000/- வாரியம் அளிப்பதை உயர்த்திட வேண்டுமெனவும், அல்லது வாரியமே இணைய வசதியுடன் Mobile/Tab வாங்கி தந்திட வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

உள்முகத் தேர்வு 7.6.2022க்கு பிறகு கிடையாது என்ற உத்தரவை நிரந்தரப்படுத்தும் வகையில் Service Regulationல் Amendment செய்துள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்கனவே, உள்ளதுபோல் யார் எப்போது படித்தாலும் உள்முகத் தேர்வு செய்திட வேண்டும்.

ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை, இடைக்கால நிவாரணம், தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஒரே காலத்தில் ஊதிய உயர்வு (4 வருடத்திற்கு ஒருமுறை) வழங்கிட வேண்டும்.

காலியிடங்களை பூர்த்தி செய்திட வேண்டும், களப்பணிக்கு ஆள் இல்லாமல் மின்சார வாரிய வருவாய் பெருகாது என்பதை அறிந்து நியமனம் செய்திட வேண்டும்.

இவ்வகையில், களஉதவியாளர் பதவிக்கு ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்திடவும், Gangman 5000 பேர் விடுபட்டுள்ளதை நியமனம் செய்திடவும், முன்னர் உள்ள கேங்மேன் 10,000/- பேரை Field Assistant ஆக மாற்றிடவும் ITI படித்தவர்களை நேரடி நியமனம் செய்திடவும், வாரியமும் அரசும் முன் வரவேண்டும்.

உத்திரப்பிரதேசத்தில் மின்விநியோக கம்பெனிகளை விற்பதை எதிர்த்து போராட்டம் உச்சமடைந்துள்ளது. அரசினுடைய நிலையில் மாற்றம் இல்லையெனில் ஏப்ரல் 19 முதல் தொடர் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளார்கள். ஆதரவு அளிப்போம் போராடுவோம். தமிழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதை முற்றுப் புள்ளி வைப்பதற்கு களமிறங்குவோம்!

அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்திட அனைவரும் கரங்கோர்ப்போம். நாட்டு மக்களையும், பொதுத்துறை நிறுவனங்களையும், தொழிலாளர்களை நசுக்கும் போக்கை ஒன்றிய அரசு கைவிட வலியுறுத்துவோம்.

அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகளும், மே தின நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்!

மே 1 தமிழகம் முழுவதும் TNEBEF மற்றும் UTUC கொடியேற்றி மே தினத்தை சிறப்பித்திடுவோம்.

**– ஆசிரியர்**

# செயற்குழு சுற்றறிக்கை

நாள் : 09.04.2025

**வணக்கம் தோழர்களே!**

2025 மார்ச் 22 மற்றும் 23 தேதிகளில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அஜந்தாவில் TNEBEF மாநில செயற்குழு கூட்டம் மாநில தலைவர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் கடந்த 2024 டிசம்பரில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்திற்கு பிறகு நடைபெறும் முதல் செயற்குழு கூட்டத்திற்கிடையே நடைபெற்றுள்ள இயக்கரீதியிலான செயல்பாடுகளையும், பொதுக்குழு தீர்மானங்கள் மீதான நமது கிளை அமைப்புகளின் நடவடிக்கைகளையும் குறிப்பிட்டு பேசியதுடன் இவ்வாண்டுக்கான செயல்பாடுகளை திட்டமிடுகிற அளவில் செயற்குழு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டிட கேட்டுக் கொண்டார்.

பொதுச்செயலாளர் 2024 பொதுக்குழு தீர்மானங்களின் மீதான வாரிய மட்டத்தில் 4.4.2025 அன்று பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளதையும், தொழிலாளர் மத்தியில் பொதுக்குழு தீர்மானங்கள், துண்டு பிரசுரங்களாக விநியோகிக்கப்பட்டு தொழிலாளர் சந்திப்பு நடைபெற்று வருவதையும், தொழிலாளர்கள், அலுவலர், பொறியாளர் மத்தியில் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு பேசினார்.

புதிய வாரியத் தலைவர் பொறுப்பேற்றிருப்பதை வாழ்த்தி வரவேற்றும், ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தை கமிட்டி அமைத்திட வாரியத் தலைவர் உத்திரவிட்டுள்ளதையும் குறிப்பிட்டு, கடந்த ஒப்பந்தத்தில் இழந்தவைகளை குறிப்பாக 6% ஊதிய உயர்வு 10% தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டதையும் நினைவுகூர்வதுடன், தொழிலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஒரே நேரத்தில் ஊதிய உயர்வு பெற்று வந்ததையும் திரும்ப பெற வேண்டும் என குறிப்பிட்டார்.

ஆட்பற்றாக்குறை, பணிச்சுமை, விபத்துகள், உயிரிழப்புகள், இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு காலியிடங்களை நிரப்புதல், விடுபட்ட கேங்மேன் நிரந்தரம், ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம், பகுதி நேரப் பணியாளர் நிரந்தரம், போன்றவையும் நேரடி நியமனத்தையும் வாரியம் மேற்கொண்டிட வேண்டும் என குறிப்பிட்டுள்ளதுடன் கிளை அமைப்புகளை வலுப்படுத்தி மின்சார வாரிய தொழிற்சங்கங்களில் முதன்மையான இடத்தினை பெறுவதற்குண்டான பணிகளை மேற்கொண்டிட கேட்டுக் கொண்டார். தொழிற்சங்க கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை விளக்கி பேசி ஒப்புதலுக்கும் முன்வைத்தார்.

பொருளாளர் 2025 ஜனவரி முதல் மார்ச் வரை வரப்பெற்றுள்ள வரவு மற்றும் செலவு விபரங்களை எடுத்துக் கூறி உறுப்பினர் சந்தா மற்றும் கட்டிட நிதி ஆகியவைகளை விரைவாக முடித்திட கேட்டுக் கொண்டார்.

வெளியீட்டு செயலாளர் ஆண்டுசந்தா புதுபித்தல் தொடர்பான கிளை வாரியாக விபரங்களை குறிப்பிட்டு புதுப்பித்திடவும், புதிய சந்தாதாரர்களை இணைத்திடவும் கேட்டுக் கொண்டார்.

செயல்தலைவர் மற்றும் அமைப்பு செயலாளர் ஆகியோர் உரையாற்றிய பின்னர் செயற்குழு உறுப்பினர்களின் விவாதம் 22 மதியம் முதல் 23 மாலை வரை நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்

1) **2024 டிசம்பர் பொதுக்குழு தீர்மானங்களின் மீது 4.4.2025 அன்று நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில் நமது கோரிக்கைகள் யாவும் நிறைவேற்றித் தர பேச்சுவார்த்தையில் வாரியத்தை வலியுறுத்திட வேண்டும்.**

2) **ஊதிய உயர்வுக்கான கமிட்டி அமைத்துள்ளதை வரவேற்பதுடன் உடனடியாக பேச்சுவார்த்தை தொடங்கிட வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

3) **கணக்கீட்டு பணியாளருக்கு Mobile app பயன்படுத்த ரூ. 10,000/- Mobile வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தொகை கூடுதல் செய்ய வேண்டும் (அ) வாரியமே Mobile இணைய வசதியுடன் வாங்கித் தர வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

4) **TNEBEF தலைமை அலுவலகம் சென்னையில் சொந்த கட்டிடம் 2026 மே மாதத்திற்குள் கட்டி முடித்திட வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.**

5) **TNEBEF, NCCOEEEல் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டுள்ளதை இச்செயற்குழு வரவேற்று NCCOEEEல் உள்ள அனைத்து அகில இந்திய மின்சங்கங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.**

6) **TNEBEF இணைப்பில் உள்ள தமிழ்நாடு UTUCயை அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவில் இணைத்து கொண்டமைக்கு அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இச்செயற்குழு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.**

7) **உள்முகத் தேர்வு Civil உத்தரவிட்டுள்ளதுபோல விரைவாக AE/Tech Assistant (Electrical & Mechanical) உள்முகத் தேர்வை விரைந்து முடித்திட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் செயற்குழு இனிதே நிறைவுற்றது.

நன்றி!

தோழமையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## மின்வாரியத் தலைவர் அவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை

நாள் : 09.04.2025

**வணக்கம் தோழர்களே!**

தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் அவர்களுடன் 04.04.2025 அன்று காலை 12.00 மணிக்கு 2024 டிசம்பர் 14, 15 மற்றும் 16ல் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட 52 தீர்மானங்களின் மீதான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

1) ஈட்டிய விடுப்பு தொடர்பாக அரசாணையை மின்வாரியத்தில் நடைமுறைப்படுத்திடவும்
2) காலியிடங்களை பூர்த்தி செய்திட அரசோடு தொடர்பு கொண்டு ITI, Diploma, Degree, படித்தவர்களை நேரடி நியமனம் செய்திடவும்
3) விடுபட்ட கேங்மேன் 5000 அரசின் ஒப்புதல் பெற்று பணியமர்ததிட உள்ளதையும்
4) கேங்மேன் ஊர் மாறுதல் மேலும் 10% அளித்திடவும்
5) BP2ஐ முழுமையாக ரத்து செய்திட நிதித்துறை மற்றும் எரிசக்தி துறையில் தொடர்பு கொள்வதாகவும்
6) பதவி உயர்வுகள் வாரியம் விரைவாக அளித்திடவும்,
7) DGRG 20 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உயர்த்தி உத்திரவிடவும்,
8) பயணச்செலவு 75%ஐ 100%மாக உயர்த்தி உத்திரவிடவும்
9) ஊதிய உயர்வு மற்றும் அலவன்ஸ் கமிட்டிகள் பேச்சுவார்த்தை விரைவாக நடத்திடவும், 6% ஊதிய உயர்வு தர மறுத்ததை அளித்திட ஆவன செய்திடவும், அலுவலர்களுக்கும் பொறியாளர்களுக்கும் பத்தாண்டுக்கொருமுறை ஊதிய உயர்வு என்பதை நான்காண்டுக்கொரு முறையாக மாற்றிடவும்,
10) ஒப்பந்த தொழிலாளர், பகுதி நேரப் பணியாளர் நியமனம் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிடவும்,
11) வாரிசு வேலை கேட்டு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு விரைவாக பணி நியமனம் வழங்கிடவும்,
12) விருப்ப மாறுதல் மற்றும் பதவி உயர்வில் ஒதுக்கீடுகளில் வாரிய விதிமுறைகளை கடைபிடிக்க செய்திடவும்,
13) TA, AE, SCII, JA உள்முகத் தேர்வு விரைந்து முடித்திடவும்
14) மேட்டூர் பணிமனையை தொடர்ந்து இயக்கிடவும்
15) இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமை விடுப்பு அளித்திடவும்,
16) கோவை தலைமை பொறியாளர் அலுவலகத்திற்கு பதவிகள் அனுமதித்திடவும்,
17) விடுபட்டுள்ள மண்டலங்களுக்கு Senior Administrative Officer பதவி வழங்கிடவும்,
18) விடுபட்டுள்ள மின்வட்டங்களுக்கு CHD வழங்கிடவும்,
19) Adm Supervisorக்கு Section Officer மற்றும் Superintendentக்கு இணையான ஊதியம் வழங்கிடவும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முடிவுக்கு கொண்டு வந்திடவும், இதர கோரிக்கைகளை மீது வாரியத்திற்கு கோப்பு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட நிர்வாக மற்றும் செயலகபிரிவு அலுவலர்களுக்கு தகுந்த உத்தரவிட்டுள்ளார்.

விரைவாக அனைத்து கோரிக்கைகளையும் வென்றெடுப்போம். 2 மணி நேரத்திற்கு மேல் நேரம் ஒதுக்கி நம்மோடு பேச்சுவார்த்தை நடத்திட்ட வாரியத் தலைவர் அவர்களுக்கும் வாரிய உயர் அலுவலர்களுக்கும் TNEBEF சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

தோழமையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## மின்கணக்கீடு - Mobile/Tab- பணம் திரும்ப பெறும் வழிமுறை

**TNPDCL**
**(ACCOUNTS BRANCH)**

From
G. Sathish Kumar, B.Sc., A.C. M.A.,
Chief Financial Controller/Revenue (FAC)
NPKRR Maaligai, 7th Floor Eastern Wing,
144, Anna Salai, Chennai - 600 002.

To
All Superintending Engineer
EDC/TNPDCL

**Circular No. CDC/REV/FC/REV/DFC/R/AAO/R/Asst./D.No. 192/25. Dt . 18.03.2025**

Sir/Madam,

***Sub :*** Revenue - Proposal for reimbursement of cost towards purchase of Android Mobile for taking assessment through Mobile App for assessment staff - Instructions for payment - Reg.

***Ref*** : Per (FB) TNPDCL Proceedings No. 03, Dated : 18.03.2025.

****

In order to ensure prompt and proper assessment with more accuracy, the assessment through Mobile App has been introduced as a pilot study which showed successful results. As such, it is proposed to extend the proposal of assessment through mobile app to all EDCS which require android mobile/tab for all Assessors/Assessment staff involved in reading works.

Meanwhile, various unions made a request to provide a separate mobile phone to the assessment staff. Based on their request, Board has approved, vide ref. cited, to reimburse the cost of android moble/TAB for an assessment staff who engaged in the regular LT NON-CT assessment work, either they can use their own mobile/TAB or purchase a new android moble/TAB with a compatibility to install TNPDCL assessment mobile app. Accordingly, the board has approved to pay through reimbursement at Rs. 10,000/- to each Assessor/ Assessment staffs who are regularly taking assessment.

In this connection, the instructions, stated below, to be followed.

1. Sanction of Rs. 10,000/- each ssessment staff towards reimbursement of cost of android mobile/tab to the assessors based on their request and declaration (format enclosed), either to use their own android Mobile/Tab or purchase new android mobile/Tab for the assessment and related works assigned to him.

2. (A) Saction of Rs, 10,000/- each towards reimbursement of cost of andriod mobile/tab to the Inspector of Assessments who are engaged in the regular assessment against the assessor post vacancy and they look after the post for continuous six months on the date of making request.

(B) As the period of assessment taken prior to this order is fixed as minimum period of six months, the reading taken period to the furnished and confirmed by section officer concerned

and authenticated by EE concerned. Besides, the same to be confirmed by Senior Manager / computer centre / Central Office based on the availbale data in LT billing package.

3. Retried staff and other personnel engaged for assessment work by the contractor under works contract or any other contract are **not** eligible for the above reimbursement.

4. The eligible assessment staff those who have minimum remaining service of 6 months can claim and get reimbursement of Rs. 10,000/- in one lumpsum.

5. The Superintending Engineer/EDC concerned are authorised to sanction the approved amount and to pass the bill for payment by adding the same in the salary bill of the respective eligible assessment staff and to book the expenditure under ERP code : 4070128 - miscellaneous expenditure.

It may be, further, noted that manual entry/HHD entry provision will be phased out in time bound manner.

Chief Financial Controller/Revenue (FAC)

## மின்கணக்கீடு - Mobile/Tab வாங்குவதற்கு ரூ. 10,000/- அளிக்கும் உத்தரவு

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

(Abstract)

TNPDCL (erstwhile TANGEDCO) - Proposal for reimbursement of cost towards purchase of Android Mobile for taking assessment through Mobile App for assessment staff - Approval accorded by Board of TNPDCL (erstwhile TANGEDCO) - Communicated.

---

ACCOUNTS BRANCH

**Per (FB) TNPDCL Proceedings No. 03** **Dated : 18.03.2025**
Kurodhi Aandu, Panguni,
Thiruvalluvar Aandu 2056.

***Read :*** Approval accorded by Board of TNPDCL (erstwhile TANGEDCO) in the 128th Board Meeting of TNPDCL held on 20.02.2025.

**PROCEEDINGS :**

In order to ensure prompt and proper assessment with more accuracy, the assessment through Mobile App has been introduced as a pilot study which showed successful results. While assessment through Mobile App in pilot study, most of the issues already sorted out but still there is a demand of separate mobile to take assessment due to several issues experienced during assessment/data transfer. Also Various trade unions made a request to provide a separate mobile phone to the assessment staff. After critical examining the request/deamnd, by stating the issues faced by the assessment staff, Board of TNPDCL (erstwhile TANGEDCO) has approved the proposal for reimbursement of cost towards android mobile for taking assessment through Mobile App for assessment staff:

1. To accord in principle approval to sanction Rs. 10,000/- (Rs. Ten Thousand only) each towards cost of andriod mobile/tab to the assessors based on their request and declaration to use their own android Mobile/Tab or purchase new android moble/Tab for the assessment and related works assigned to him.
2. To accord in pricinple approval to sanction Rs. 10,000/- (Rs. Ten Thousand only) each towards cost of android mobile/tab to the Inspector of Assessments who are engaged in the regular assessment against the assessor post vacancy and they look after the post for continuous six months on the date of making request.
3. Retired staff and other personnel engaged for assessment work by the contractor under works contract or any other contract are not eligible for reimbursement.
4. The eligible assessment staff those who have minimum remaining service of 6 months can claim and get reimbursement of Rs. 10,000/- in one lumpsum.
5. To Authorise the Superintending Engineer/EDC concerned to sanction the reimbursement and to pass the bill for payment by adding the same in the salary bill of the respective eligible assessment staff.
6. To book the expenditure under ERP code: 4070128 - miscellaneous expenditure.

**(By order of the Board of TNPDCL)**

**G. SATHISH KUMAR**
Chief Financial Controller
Revenue/TNPDCL (FAC)

## வெளிநாடு பயணம் - தடையில்லா சான்று - அதிகார வரம்பு

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

(Abstract)

Tamil Nadu Electricity Board Employees' Conduct Regulations Issue of "No Objection Certificate" to the officials/employees to undertake trips to foreign countries - Change in delegation of powers to issue No Objection Certificate to the Officers in Class I Service - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**Per (FB) TNPDCL Proceedings No. 14**

**Dated the 17th March 2025,**
Panguni-3, Krothi Varudam,
Thiruvalluvar Aandu 2056.

**READ:**

1. G.O. Ms. No. 164, Finance (BPE) Department, dated 31.05.2023.
2. (Per) FB TANGEDCO Proceedings No. 21 (SB), dated 03.08.2023
3. Minutes of the 128th Board Meeting of TNPDCL held on 20.02.2025.

****

**PROCEEDINGS :**

The Government in its G.O. read above, had issued orders simplifying the process for approval of foreign visits by the employees of State Public Sector Undertakings/Statutory Boards. The said orders have been adopted in TNPDCL (Erstwhile TANGEDCO) vide Proceedings read above. In the said Proceedings, among others, orders have been issued delegating powers for issuing "No Objection Certificate" to the officials/employees of TANGEDCO/ TANTRANSCO for undertaking foreign visits as below:

| S.No | Purpose of Visit | Approving Authority |
|---|---|---|
| 1. | (i) Private visit and to seek employment abroad on private funds by the officials in Class I Service (All CES, SES, EEs and equivalent cadre).<br>(ii) Private visit and to seek employment abroad on private funds by the Officials/Employees in Class II, III and IV Services. | Chairman cum Managing Director/TANGEDCO.<br>Secretary / TANGEDCO |
| 2. | Official visit by the Officials in Class I Service (Except CMD / TANGEDCO, MD/TANTRANSCO and Directors), not invoilving Government funding but funding by the TANGEDCO. | Board of Directors of TANGEDCO. |
| 3. | Official visit with Government funding or funding by agencies other than the TNPDCL or funding through external/vendor hospitality i.e. Official visit not covered under Serial Nos.2 & 4. | Government |
| 4. | Official visit or Private visit (own funds) by the CMD/ TANGEDCO, MD/TANTRANSCO and Directors of TANGEDCO and TANTRANSCO. | Government |

2. Consequent on formation of new entities, viz. TANTRANSCO, TNPDCL, TNPGCL and TNGECL, it has been considered appropriate that the powers entrusted with the CMD/TANGEDCO (now TNPDCL), be delegated to the Managing Directors of the TNGECL, TNPGCL and TANTRANSCO and to the Secretary/TNPDCL, so as to simplify the process of issuance of "No Objection Certificate" to the officials/employees. The Board of TNPDCL has also approved the said proposal.

3. Accordingly, the following amendment is issued to the Proceedings read above, delegating powers to the Managing Directors of the TNGECL, TNPGCL and TANTRANSCO to issue "No Objection Certificate" to the Class-I Officers working under their control to undertake trips to foreign countries; and to the Secretary/TNPDCL for issuing "No Objection Certificate" to Class I Officers of TNPDCL to undertake trips to foreign countries, in addition to the powers already delegated to him to issue "No Objection Certificate" to the officials/employees to undertake trips to foreign countries:

## AMENDMENT

In (Per) FB TANGEDCO Proceedings No.21 (SB), dated 03.08.2023, in para-3 (I) "Delegation of powers for issuing No Objection Certificate", for the expressions against "Sl. No.1", the following expressions shall be substituted:

| | | |
|---|---|---|
| 1. | (i) Private visit and to seek employment abroad on private funds by the officials in Class I Service in respect Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL), Tamil Nadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO). | The Managing Direcor of the respective Corporations. |
| | (ii) Private visit and to seek employment abroad on private funds by the Officials in Class I Service in respect of Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL); and to the Officials/ Employees in Class II, III and IV Services in respect of all Corporations viz., TNPDCL, TNPGCL, TNGECL and TANTRANSCO. | Secretary/TNPDCL |

**(BY ORDER OF THE BOARD)**

**J. Radhakrishnan**
**Chairman and Manging Director**

## 07.02.22க்கு பிறகு உள்முகத் தேர்வு இல்லை - விதிமுறையில் திருத்தம்

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ABSTRACT)**

TNPDCL - Recruitment Appointment of officials/employees to the posts through Internal Selection Dispensing with the method of "Internal Selection" - Orders issued - Amendment to TNEB Service Regulations - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**Per (FB) TNPDCL Proceedings No. 13**

**Dated the 17th March 2025,**
Panguni-3, Krothi Varudam,
Thiruvalluvar Aandu 2056.

**READ:**

(Per) FB TANGEDCO Proceedings No.5 (Administrative Branch), dated 07.07.2022.

******

1. G.O. Ms. No. 164, Finance (BPE) Department, dated 31.05.2023.
2. (Per) FB TANGEDCO Proceedings No. 21 (SB), dated 03.08.2023
3. Minutes of the 128th Board Meeting of TNPDCL held on 20.02.2025.

****

**PROCEEDINGS:**

In the Proceedings read above, orders have been issued dispensing with the method of "Internal Selection" for appointment of officials/employees to all the posts with effect from 7th June 2022, subject to the condition that the Internal Selection shall be considered for existing staff who have already acquired the qualification as per the provisions of TNEB Service Regulations. A proposal for incorporating a new provision to this effect, in the Tamil Nadu Electricity Board Service Regulations has been evolved and the Board of TNPDCL in its 128th Meeting held on 20.02.2025 has approved the same.

2. Accordingly, in exercise of the powers conferred by Section 79(c) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948), read with Section 185 of the Electricity (Supply) Act, 2003, G.O.Ms.No.100, Energy (B2) Department, dated 19.10.2010 and G.O.Ms.No.32, Energy (B2) Department, dated 06.03.2024, the Tamil Nadu Power Distribution Corporation Limited (formerly Tamil Nadu Electricity Board) makes the following amendments to the Tamil Nadu Electricity Board Service Regulations:-

**AMENDMENT**

In the said Regulations, in regulation 87, under sub-regulation (10-A), the following Proviso shall be added, namely:

> "Provided that on and from 7th June 2022, the method of appointment to all the posts through Internal Selection is dispensed with. However, the employees who had already acquired the qualifications which are prescribed as pre-requisite qualification for appointment to the posts, before 7th June 2022, shall be considered for appointment to the posts through Internal Selection."

3. The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE BOARD)**

**J. RADHAKRISHNAN**
**CHAIRMAN AND MANAGING DIRECTOR**

## ஒன்றுக்கு மேற்பட்ட கூடுதல் பணி - ஊதியம் வழங்குவது தொடர்பாக

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

SECRETARIAT BRANCH
144, Anna Salai,
Chennai -2.

**Letter No. 32368/A17/A171/2024-1, dated : 18.02.2025**

From
**Thiru. R. Devaraj, M.Com.,**
Secretary

To
**The Chief Engineer/Distribution,**
Erode Region

Sir,

Sub : Establishment - Class II Service - Certain Assitant Executive Engineer's/Assistant Engineer's of Erode Region - Held Additional Charge of more than one post - Additional Charge Allowance sanctioned - Objection raised by the Audit Party - Clarification - Sought for - Reg.

Ref : 1. From SE/Erode EDC Lr.No. 012774/519/நிபி.4/உ.2/தணிக்கைச் சீட்டு/2024, dated 27.08.2024.
2. Your Lr.No. 7864/930/நிபி.1/அ.1/கோ.தணிக்கை/2024-1, dated 13.11.2024.
3. Fom SE/Erode EDC/ Lr.No. 012774/519/நிபி.4/உ.2/ தணிக்கைச் சீட்டு/2024-1, dated 03.12.2024

*****

With reference to the above, I am to state that as per regulation 49 of TNEB Service Regulations, an employee may be appointed whether permanent or officiating, to hold full additional charge or to discharge the current duties of one or more independent posts at one time, as a temporary measure and grant additional pay subject to certain limits. The regulations 49(1) (iii) as amended in (Per) FB TANGEDCO Proceedings No. 4 (SB), dt. 09.01.2023 reads as below:

Additional pay for holding full additional charge shall be granted at the rate of one fifth of the pay drawn in the regular post or half of the minimum pay of the additional post, whichever is less. The additional pay shall be sanctioned irrespective of the duration

of the charge held or the number of posts of additional charge held by Class-I and II officers only.

As per the said amended regulation, the Additional Charge Allowance for looking after the works of more than one post, could not be sanctioned on and from 25.01.2019. However, clarifications were sought for from the Secretariat Branch for sanctioning additional charge allowance for such arrangements even after 25.01.2019. After examining the issue, all the CEs/SEs were clarified that no such Additional Charge Arrangement shall henceforth, be made and in the case of administrative exigency, the incumbent shall be instructed to hold Full Additional Charge of one post and to hold "In-charge" of other posts & vide Secretariat Branch's Lr.No.34666/A18/A181/2019-1, dated 03.12.2019. The said clarification was issued to all the CES/SEs only for the purpose of making additional charge arrangement and not for sanctioning additional charge allowance, as the same is not at all permissible on and from 25.01.2019, i.e. the date on which amendment has been issued to TNEB Service Regulations.

2. Further, on perusal of the Audit Slips issued by the Audit Party/Erode Region, it has been found that they have raised objection on the arrangements which were made prior to 25.01.2019 as well, stating that the same is not in accordance with regulation 49(1)(iii) of TNEB Service Regulations. The said contention of the Audit Party is not in order, as the restriction on sanctioning Additional Pay only to one post, has come into effect only from 25.01.2019 consequent on issuance of amendment to regulation 49(1)(iii) of TNEB Service Regulations. Therefore, the additional charge allowance sanctioned to the individuals who looked after additional charge of more than one post at a time prior to 25.01.2019, need not be recovered from them, but the same may be recovered from them for the period on and after 25.01.2019. The Chief Internal Audit Officer/Audit Branch has also agreed to the aforementioned points.

3. I am, therefore, to request you to apprise the above position to the Audit Party suitably, so as to drop the objections raised by them

Yours faithfully,
**(S. VIJAYAKUMAR)**
Section Officer
for Secretary

# ‘‘கேட்டதும் பார்த்ததும்’’

- அ. முருகவேல் B.E.,
கோவை

ஒரு வயது வந்த ஆரோக்கியமான மனிதன் சராசரியாக நிமிடத்திற்கு 15 முதல் 18 முறை சுவாசிக்கிறான். ஒரு நாளைக்கு சுமார் 23000 - 25000 முறை மூச்சு விடுகிறோம். அமெரிக்க நுரையீரல் சங்கத்தின் கூற்றுப்படி, ஒரு வயது வந்த மனிதனின் நுரையீரல் அதிகபட்சமாக 6 லிட்டர் காற்றை வெளியேற்றும். ஒரு நபர் ஒவ்வொரு நாளும் 7570 லிட்டர் காற்றை உட்கொள்வதாக ஆய்வு மதிப்பிடுகிறது. அதில் உள்ளிழுக்கும் காற்றில் 20 சதவீதம் ஆக்சிஜனும் வெளியிடும் காற்றில் 15 ஆக்சிஜனும் உள்ளது. அதாவது ஒவ்வொரு சுவாசத்திற்கும் 5 சதவீத வாயு, கார்பன் -டை -ஆக்சைடாக மாற்றப்படுகிறது. ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 378 லிட்டர் தூய ஆக்சிஜனை உட்கொள்கிறான்.

ஒரு 10 கிலோ எடையுள்ள அலுமினிய சுவாசக்காற்று உருளை ஒரு நோயாளிக்கு சுமார் 10 மணி நேரம் பயன்பாட்டிற்கு போதுமான ஆக்சிஜனை வழங்கும். ஒரு 10 கிலோ அலுமினிய சுவாசக்காற்று உருளையின் விலை சுமார் 2500/- ரூபாய். 24 கிலோ சுவாசக்காற்று உருளையின் விலை ஒரு நாளைக்கு 6200/- ரூபாய், ஒரு மாதத்திற்கு 1,86,000/- ரூபாய். ஒரு வருடத்திற்கு சுமார் 22,32,000/- ரூபாய். ஒரு மனிதனின் சராசரி ஆயுள்காலம் 65 வருடம் என்றால், நம்முடைய வாழ்நாளில் சுமார் 14.5 கோடி ரூபாய்க்கு பெறுமான சுவாசகாற்றை நாம் சுவாசிக்கிறோம்.

இவ்வளவு விலையுயர்ந்த, மதிப்புமிக்க சுவாச காற்றை நமக்கு இலவசமாக ‘‘மரங்கள் ’’தருகின்றன. அப்படி என்றால் நாம் மரங்களுக்கு எந்த அளவிற்கு மதிப்பும், மரியாதையும் கொடுக்க வேண்டும்? மரங்கள் இயற்கை மனிதனுக்கு தந்த ‘‘பொக்கிஷம்’’ என்றால் அது மிகையாகாது.

மரத்தின் அருமை குறித்து சொல்லாத அறிஞர்களே கிடையாது. நம்முடைய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான மறைந்த மரு. A.P.J அப்துல்கலாம் அவர்கள் மரத்தின் அருமை குறித்து கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

**கிளி வளர்த்தேன் பறந்துவிட்டது**
**அணில் வளர்த்தேன் ஓடிவிட்டது**
**மரம் வளர்த்தேன் இரண்டும்**
**திரும்பி வந்துவிட்டது**

-அப்துல்கலாம்

ஒரு வளர்ந்த மரம் உற்பத்தி செய்யும் ஆக்சிஜன் அளவின் மதிப்பு மட்டும் ஆண்டுக்கு ரூ.23 கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு டன் எடை கொண்ட ஒரு வளர்ந்த மரம் அந்த இரண்டு டன் வளர்வதற்குள் ஏழு டன் கார்பன் டை ஆக்சைடுவை ஆக்சிஜன் ஆக மாற்றி விட்டிருக்கும் என்று ஒரு ஆய்வு கட்டுரை சொல்கிறது.

மரங்களில் அதிக அளவு ஆக்சிஜனை உற்பத்தி செய்யும் மரங்களில் ஆலமரமும், அரச மரமும் ஒன்று. நன்கு வளர்ந்த ஒரு அரசமரம் நாள் ஒன்றுக்கு 2400 கிலோ பிராண வாயுவை வெளியிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்தியாவில் 33% அளவுக்கு இருந்த காடுகள் தற்போது 2021 கணக்கின்படி 22% காடுகள் மட்டுமே உள்ளன. ஆனால் மக்கள் தொகை மட்டும் ஆண்டுதோறும் கூடிக் கொண்டே செல்கிறது. அதற்கு தகுந்தால் போல் நாமும் மரங்களை கட்டாயம் வளர்த்திட வேண்டும். இது நமது ஒவ்வொருவர் மீதும் விழுந்த கடமையாகும். இதை செய்ய நாம் தவறிவிட்டால் **நாம் ஒவ்வொருவரும் ஆக்சிஜன் சிலிண்டரை தோளில் கட்டி சுமந்து செல்லும் காலம் வெகுதூரத்தில் இல்லை** என்பதை இப்போதாவது உணருங்கள்.

தமிழகத்தில் தற்போது சுமார் 7 கோடி பேர் இருக்கிறோம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 24 கிலோ ஆக்சிஜன் வேண்டும் என்றால் 168 கோடி கிலோ ஆக்சிஜன் ஒரு நாளைக்கு தேவைப்படுகிறது. ஓராண்டுக்கு? பத்தாண்டுகளுக்கு? 20 ஆண்டுகளுக்கு? இப்படியே எண்ணிக் கொண்டு போனால் பூஜ்யங்களுக்கு மதிப்பு இருக்காது. நம்மிடம் இருக்கும் பணமும் நம்மை காப்பாற்றாது.

நம் வீட்டு விசேஷங்களிலும், பிறந்தநாட்களிலும், திருமண நாட்களிலும், நாம் சந்தோசமாக இருக்கும் எல்லா நேரங்களிலும், வார விடுமுறையிலும் மரம் நடுவதை ஒரு பண்டிகையாகவே கொண்டாடுங்கள். உங்கள் வீட்டின் முன்புறமோ, பின்புறமோ மரத்தை நடுங்கள் அல்லது வீட்டின் அருகில் இடம் இல்லை என்றால், பொது பயன்பாடு உள்ள இடங்களில் அருகில் உள்ள பேருந்து நிறுத்தம், ஏரிக்கரை, குளக்கரை, கால்வாய் ஓரங்களில் சென்றாவது மரத்தை நடுங்கள்! அவற்றை உருவாக்குங்கள்! அவைகள் தூரத்தில் இருந்தாலும், அங்கிருந்தும் உங்களுக்கு சுவாசக் காற்றை அனுப்பிக்கொண்டுதான் இருக்கும். எனவே உங்கள் வீட்டில் வைக்க முடியாதவர்கள் இந்த பரந்தபட்ட பூமியில் எங்கு வேண்டுமானாலும் மரத்தை நட்டு உருவாக்குங்கள்.

தற்போது நிறைய தன்னார்வ நிறுவனங்கள் இலவசமாகவே மரக்கன்றுகளை வழங்குகிறார்கள். எனவே விலைகொடுத்து மரங்களை வாங்க முடியாதவர்கள், இதை பயன்படுத்தி புதிதாக காடுகளை உருவாக்குங்கள். அவைகளால் சுவாசக் காற்று மட்டுமல்ல, அதிக மழை பொழியும், நிலத்தடி நீர் அதிகரிக்கும், பறவைகளின் இருப்பிடமாகும், நமக்கான பழங்கள் கிடைக்கும், வீட்டு பயன்பாட்டுப்பொருள்கள் ஆகியவைகள் மூலம் நமக்கே அவைகள் திரும்ப தருகின்றன.

தமிழக அரசு மரம் வளர்ப்பதற்கான பசுமை திட்டங்களை பரவலாக்க வேண்டும். மரங்களையும், மலைகளையும் சேதபடுத்தாத திட்டங்களை கொண்டு வந்து, மக்களின் உயிர்காக்க வேண்டும் என்பதே அனைவரின் அவா. ஒரு மனிதன் சராசரியாக உயிர் வாழ சுமார் 450 முதிர்ந்த மரங்கள் தேவைப்படுகின்றன. அப்படி என்றால் தமிழகத்தில் உள்ள அனைத்து மரங்களையும் விரைவாக கணக்கெடுத்து, மரம் வளர்ப்பதை போர்க்கால அடிப்படையில் அரசு செய்தால், வருங்கால சந்ததி ஆரோக்கியமாக வாழும்.

# மத்திய தொழிற்சங்கங்கள் - கூட்டு மனு

To
**The Regional Provident Fund Commissioner**
Employees' Provident Fund Organisation
Royapettah, Chennai - 600 014.

***Sub : Submission of Memorandum regarding EPF Pension Scheme and Related Concerns - Reg.***

Respected Sir,

We, the representatives of the **Joint Action Committee of All Central Trade Unions and Independent** Federations of Tamil Nadu, are submitting this memorandum to express our serious concerns regarding the functioning of the Employees' Provident Fund Organisation (EPFO) and the current status of pension disbursal under the EPS-95 scheme.

When the **Employees' Provident Fund Act, 1952** was enacted, it was heralded as a landmark social security measure for the working class. Contributions from both employees and employers were pooled, invested, and returned with interest - a reassuring promise of social security after retirement.

In **1971,** the **Family Pension Scheme** was introduced with contributions from the employee, employer, and government at a ratio of 1 1/6: 1 1/6: 1 1/6 respectively. This scheme was designed to support the families of deceased employees by providing a family pension.

Later, the **Employees' Pension Scheme (EPS) 1995** was implemented with the noble objective of providing monthly pensions to retired employees. Under this scheme,

**8.33% of the employer's contribution** and **1.16% from the Government** were earmarked for pension. The pension was calculated using a formula based on the last drawn salary divided by a factor of 70.

However, the actual pension disbursed to most retirees remains **paltry and inadequate,** failing to meet the rising cost of living. While the **UPA Government declared a minimum pension of Rs.1000/- in 2010,** that too for the retirees superannuated at the age of 58 years who did not avail the facilities of commutation or return of the capital this amount is grossly insufficient today. The working class has been persistently demanding that the **minimum monthly pension be raised to Rs.9000/,** a just and necessary measure in line with inflation and basic living standards. Unfortunately, this genuine demand has been repeatedly denied under the pretext of the Government's financial constraints.

We place the following **demands and clarifications** for immediate attention:

1. **Clarification on the 1971 Family Pension Fund corpus** - What was the quantum of the fund when it was merged with EPS-95, and how has it been utilized since then?
2. **Disclosure of capital data of deceased pensioners** - How many pensioners have died since 1995, what was their accumulated capital, and what has been done with this fund?

3. **Unaccounted funds from multiple PF accounts**-Prior to 2014, many migrating workers had multiple inactive accounts due to lack of portability. These unaccounted amounts must be transparently calculated and merged appropriately.

4. **Lack of transparency in interest calculations** - Employees are unable to verify whether interest on their provident fund accounts is being calculated and credited properly. A transparent mechanism must be established.

5. **Judicial delays and denial of justice** - Thousands of pensioners are forced to knock on the doors of the judiciary to claim their rightful dues. A glaring example is the case of **retirees of Neyveli Lignite Corporation** and many other organizations who have been waiting for years without justice.

6. **Higher Pension Application - Lack of Clarity** - The EPFO invited applications from employees willing to contribute more towards higher pension. However, even after receiving applications, the **formula for higher pension has not been disclosed,** leaving applicants in the dark.

7. **Inadequate and indifferent approach of EPFO officials** - It is disheartening to note that many pensioners are subjected to apathy, lack of response, and miscommunication when seeking clarifications from EPFO offices.

We strongly urge the EPFO to:

- **Declare the financial status** and utilisation of the pension and provident fund corpus.
- **Enhance the minimum pension** to Rs.9000/& with DA linkage.
- **Ensure full transparency** in fund management, account transfers, and interest calculation.
- **Provide time-bound redressal** mechanisms to pension-related grievances.
- **Reveal the formula and structure** for the proposed higher pension scheme.

This memorandum is being submitted as part of a state-wide demonstration organized on **08.04.2025** by the Joint Action Committee to condemn the indifferent and exploitative approach of the EPFO towards pensioners and working-class contributors.

We sincerely hope that your esteemed office will take immediate steps to resolve these long-pending issues in the interest of social justice and workers' welfare by adopting a friendly approach to ensure transparency and tussle-free atmosphere.

Yours sincerely,
**For and on behalf of the**
**Joint Action Committee of All Central Trade Unions and Independent Federation - Tamil Nadu**

| | | | | |
|---|---|---|---|---|
| **LPF** | **HMS** | **AITUC** | **CITU** | **INTUC** |
| **AIUTUC** | **AICCTU** | **TUCC** | **UTUC** | **WPTUC** |
| **MLF** | **LTUC** | **LLF** | | |

Date: 08.04.2025

Place : Chennai

## மத்திய தொழிற்சங்கங்கள் - கூட்டு மனு

பெறுநர்:

**மண்டல ஆணையாளர்** அவர்கள்,
தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம்,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**பொருள் : வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் பயனாளிகளை உதாசீனப்படுத்துவது - அலைக்கழிப்பது - 1995 திட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கான பிரச்சினைகள் குறித்து.**

வருங்கால வைப்பு நிதிச் சட்டம் 1952-ல் துவங்கப்பட்டது. தொடக்க காலத்தில் தொழிலாளிக்கு ஒரு உயரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமாக ஏற்றுக் கொண்டது. அதற்கீடான பங்கை வேலை அளிப்பவர் தொழிலாளிகளிடம் ஒரு பங்கும் மாதா மாதம் பிடித்தம் செய்யப்பட்டு அந்தத் தொகை ஓய்வு பெறும் காலத்தில் வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 1971ஆம் ஆண்டு குடும்ப நல ஓய்வூதிய திட்டம் உருவாக்கப்பட்டு அதில் அரசு 1 1/16%, தொழிலாளி 1 1/16% நிர்வாகம் 1 1/16% அரசு பங்களிப்பில் இருந்து அத்திட்டத்தில் குடும்பத் தலைவர் இறந்து விட்டால் அந்த குடும்பத்திற்கு ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

அதன் பிறகு 1995-ல் தொழிலாளிக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஓய்வூதிய திட்டம் 1995 என்று கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டத்தில் நிர்வாகத்தின் பங்கில் 8.33% ஓய்வூதியத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசு 1 1/16% தன் பங்காக அளித்தது. தொழிலாளி ஓய்வு பெறும்போது கடைசியாக வாங்கிய மாத ஊதியத்தை அவருடைய பணிக் காலத்தால் பெருக்கி வரும் தொகையை 70ஆல் வகுக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

இந்த ஓய்வூதியம் மிகவும் குறைவாக இருப்பதால் நீண்ட கால தொழிலாளர்களின் கோரிக்கையை UPA அரசு ஏற்று குறைந்தபட்ச ஊதிய விகிதம் ரூ.1000/- என 2010 முதல் வழங்க ஒப்புதல் அளித்தது. 58 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மூலதனத்தை திரும்பப் பெறுதல் (Return of Capital) மற்றும் ஓய்வூதியத்தை தொகுத்து பெறுதல் (Commutation) போன்ற பிரச்சினைகள் உள்ளது.

அதன் பின் இந்த ஓய்வூதியம் உயர்த்த வேண்டுமென்று 80 லட்சம் ஓய்வூதியதாரர்கள் நாடு முழுவதும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். ஓய்வூதியம் வழங்க நிதி இல்லை என்று அரசு கூறி வருகிறது.

1) இந்த ஓய்வூதியம் கொண்டு வரும்போது 1971 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் அனைத்தும் இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அந்தத் தொகை என்ன ஆயிற்று?

2) 1995 முதல் இன்று வரை எத்தனை ஓய்வூதியதாரர்கள் மறைவு எய்தி உள்ளார்கள். அவர்களின் மூலதனப் பங்கு எவ்வளவு? அத்தொகை என்ன ஆயிற்று?

3) 2014ஆம் ஆண்டுக்கு முன்னர் வருங்கால வைப்பு நிதி ஒவ்வொரு தொழிலாளியும் பணிபுரியும் நிறுவனங்கள் மாறும்போது வெவ்வேறு கணக்குகள் துவங்கப்பட்டு அந்தக் கணக்குகள் அந்த தொழிலாளிக்கே தெரியாமல் உள்ள தொகை ஏறத்தாழ லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வைப்பு நிதியாக வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் உள்ளது. இந்த நிதிகளை ஏன் கணக்கில் கொள்ளவில்லை?

4) மேலும் ஓய்வூதியர்களுக்கு அவர்களுடைய பங்குத் தொகைக்கு தொடர் வட்டி கணக்கிடு வதில் ஒரு வெளிப்படைத் தன்மை இல்லாமல் தொழிலாளர்களை ஏமாற்றி வருகிறது.

5) பல தொழிலாளர்கள் ஓய்வூதியம் மற்றும் இதர பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக நீதிமன்றத்திற்கு சென்று அவர்களின் உரிமைகளை மறுத்து வருகிறது. உதாரணமாக NLC நிறுவனம் மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் ஒய்வு பெற்றவர்களின் ஓய்வூதியம் வழங்குவது குறித்த வழக்கை வேண்டுமென்றே வைப்பு நிதி நிர்வாகம் இழுத்தடித்து வருகிறது.

புதியதாக தொழிலாளி வாங்கும் சம்பளத்திற்கு ஓய்வூதியப் பங்கை செலுத்தினால் அவர்களுக்கு உயர் பென்சன் வழங்கப் போவதாக நிர்வாகம் அறிவித்தது. அதற்குரிய விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. ஆனால் இன்று வரை அந்த ஓய்வூதிய கணக்கீடுகளுக்கான சூத்திரம் (Formula) வழங்கப்படவில்லை. ஒரு தெளிவான முடிவும் நிர்வாகத்திடம் இருந்து அறிவிக்கப்படவில்லை.

வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் வருங்கால வைப்பு நிதி பயனாளிகள், கணக்கு எண், கணக்கு சரி பார்ப்பது, குடும்ப ஓய்வூதியர், வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர், அவர்களுக்கு உயர்த்தப்பட்ட (Higher Pension) ஓய்வூதியம் தொடர்பாக பயனாளிகளை அலைகழிக்கும் போக்கை கைவிட வேண்டும். பயனாளிகளின் நலன்களைப் பாதுகாக்கவும் முன் வரவேண்டும்.

எனவே தொழிலாளர்களாகிய நாங்கள் கொடுக்கும் பங்குத் தொகையில் நடத்தப்படும் வைப்பு நிதி அலுவலகம் பிரச்சினைகளுக்கு நியாயமான பதில் சொல்லாமல் ஏமாற்றுவதும், இழுத்தடிப்பதை கண்டித்தும் உடனடியாக குறைகளுக்கு விரைவில் தீர்வு காண முன் வரவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **LPF** | **HMS** | **AITUC** | **CITU** | **INTUC** |
| **AIUTUC** | **AICCTU** | **TUCC** | **UTUC** | **WPTUC** |
| **MLF** | **LTUC** | **LLF** | | |

நாள் : 08.04.2025 இடம் : சென்னை-14

## மின்வாரியத் தொழிலாளருக்குப் பாதுகாப்பான பணிச்சூழல் வேண்டும்

நன்றி : **இந்து தமிழ், 13.03.2025**

**த**மிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் (டேன்ஜெட்கோ) தொழிலாளர்கள், பணியின்போது விபத்துகளில் சிக்கி உயிரிழப்பது துயரக்கதையாகவே தொடர்கிறது. அண்மையில் மின் பகிர்மானக் கழகம் அதன் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை, தொழிலாளர்களின் ஆபத்தான பணிச்சூழல் மாறவில்லை என்பதையே உணர்த்துகிறது.

அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிப்போன மின்சாரத்தை உற்பத்தி செய்வது. அதிக மின் அழுத்த மின்சாரத்தை நெடுந்தூரத்துக்குக் கொண்டுசெல்வது. குறைந்த மின் அழுத்த மின்சாரத்தை நுகர்வோருக்கு விநியோகிப்பது ஆகிய ஆதாரமான வேலைகளை மின்பகிர்மானக் கழகம் செய்துவருகிறது. இயற்கைப் பேரிடர்களின்போது மின் விநியோகம் தடைபட்டாலும், போர்க்கால வேகத்தில் செயல்பட்டு மின் இணைப்புகளை மீட்டெடுப்பதில் இதனுடைய பங்களிப்பை யாரும் மறுக்க முடியாது. இந்த அமைப்பின் கைகளாகவும் கால்களாகவும் இருப்பவர்கள் களப்பணியாளர்கள்தான். தங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் இவர்கள் பணிபுரிந்து வருவதுதான் நிரந்தர நடைமுறையாக உள்ளது. 2021-22இலிருந்து 2023-24 வரைக்கும் 87 பணியாளர்கள் இறந்துள்ளனர். ஒப்பந்தப் பணியாளர்களையும் சேர்த்தால் எண்ணிக்கை இன்னும் கூடுதலாகவே இருக்கும்.

மின் பகிர்மானக் கழகம் இதைத் தடுப்பதற்குச் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் இல்லை. பணியின்போது நவீனரகப் பாதுகாப்புக் கருவிகளின் பயன்பாடு கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. மின்கம்பங்களையோ, மின்மாற்றிகளையோ பழுதுபார்க்கும்போது கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள ஃபோர்மேன், லைன் இன்ஸ்பெக்டர் போன்றோர் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் நிர்வாகம் கவனம்செலுத்துகிறது. அதற்காகத் தலைமைப் பொறியாளர்களுக்கும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும் பிப்ரவரி இறுதியில் விநியோக இயக்குநர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையும் அத்தகைய நடவடிக்கைகளின் ஓர் அங்கம்தான். தமிழகத்தில் சுடந்த நான்கு மாதங்களில் ஏறக்குறைய 12 பேர் இறந்துள்ளதாகவும் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. தொழிலாளர்களுக்குப் பொறியாளர்கள் வாரந்தோறும் பாதுகாப்புக்கான பயிற்சி வகுப்பு நடத்தவும், தொழிலாளர்கள் பாதுகாப்புடன் பராமரிப்புப் பணியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்தவும் இயக்குநர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளையில், களப்பணியாளர்கள் மின்சாரம் தாக்கி இறப்பதை அதிகாரிகளின் தவறுதலாகக் கூறுவதால் மட்டும், இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடப் போவதில்லை என மின்சார வாரியத் தொழிலாளர் சார்ந்த அமைப்புகள் கூறுகின்றன. 60,000க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ளன. வயர்மேன், உதவியாளர் ஆகியோர் செய்ய வேண்டிய பராமரிப்புப் பணிகளில், குழி தோண்டுவது, மின் கம்பம் நடுவது

போன்றவற்றுக்கு மட்டுமே பயிற்சி பெற்ற கேங்மேன்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆள் பற்றாக்குறை காரணமாக ஒரே பணியாளர், எட்டு மணி நேரத்துக்கும் அதிகமாக உடல் உழைப்பைச் செலுத்த வேண்டிய சூழல், பல சந்தர்ப்பங்களில் விபத்துக்குக் காரணமாகிறது.

தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பகிர்மானக் கழகம், 2023இல் ‘டிஎன்ஈபி சேஃப்டி’ என்கிற செயலியை அறிமுகப்படுத்தியது. தொழிலாளர்கள் பாதுகாப்புக் கருவிகள், தகுந்த வழிமுறைகளோடு பணியில் ஈடுபடுவதைக் கண்காணிப்பாளர்கள் ஒளிப்படம் எடுத்து மேலிடத்துக்கு அனுப்புவதை இந்தச் செயலி கட்டாயம் ஆக்கியது. பல இடங்களில் ஒரே ஆளே எல்லா வேலைகளையும் பார்க்க வேண்டிய சூழலில், இந்தக் கண்காணிப்பு முறை நாளடைவில் நீர்த்துவிட்டதே நிதர்சனம்.

விபத்துக்கு உள்ளாகும் தொழிலாளர் குறித்த புள்ளி விவரங்களில் ஒப்பந்தப் பணியாளர்களின் எண்ணிக்கை காட்டப்படுவதே இல்லை எனவும் தொழிலாளர் அமைப்பினர் கூறுகின்றனர். பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வரும் தங்களை நிரந்தரமாக நியமிக்கும்படி ஒப்பந்தப் பணியாளர் விடுக்கும் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு ரிதிநெருக்கடியும் நிர்வாக விதிமுறைகளும் காரணமாக இருக்கலாம். உயிருக்குப் பாதுகாப்பான பணிச்சூழலை வழங்குவதில் எந்தச் சமரசமும் இருக்கக் கூடாது. இல்லையெனில், சுற்றறிக்கைகள் வெறும் அலுவலகச் சம்பிரதாயமாகவே நீடிக்கும்.



# களப்பணியாளர் - பதவி உயர்வு குறித்து விளக்கம்
# தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் நிர்வாகக் கிளை

**கடித எண். 042417/199/ஜி.32/ஜி.321/2019-5, நாள்: 04.04.2025**

அனுப்புநர்

**பொறிஞர். மு. அம்பிகா,**
தலைமை பொறியாளர் பணியமைப்பு,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

பெறுநர்

**அனைத்து மேற்பார்வை பொறியாளர்**
அனைத்து தலைமைப் பொறியாளர்

பொருள் : நிர்வாகம் - களப்பணி - களப்பணியார்களின் பதவி உயர்வு தீர்வுக்குரிய மாதம் Crucial Month அடிப்படையில் வழங்க அறிவுறுத்துவது - தொடர்பாக.

பார்வை : **1) B.P. Ms (CH) No. 212 (Secretary Branch) dt. 12.06.1987.**
**2) (Per) CMD TANGEDCO Proceedings No. 230 (Secretary Branch) dt. 20.11.2021.**

★★★★

பார்வையில் காணும் வாரிய உத்தரவுகளின்படி களப்பணியாளர்களின் பதவி உயர்வு என்பது ஒவ்வொரு வருடத்திற்குரிய ஒவ்வொரு பதவிக்கான காலி பணியிடங்களை பொருத்து பதவி உயர்வு வழங்க அப்பதவிக்கான தீர்விற்குரிய மாதத்தின் (Crucial Month) அடிப்படையில் Estimate Vacancy தயார் செய்து களப்பணியாளர்களின் தகுதிக்காண் அறிக்கை கோரப்பட்டு, வாரிய விதிகளின்படி தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

2) ஆனால், பெரும்பாலான வட்டங்களில் களப்பணியாளர்களின் பதவி உயர்வுகள் பார்வையில் குறிப்பிட்டுள்ள வாரிய உத்தரவுகளின்படி தேர்வு பட்டியல் தயார் செய்யப்படவில்லை எனவும், பதவி உயர்வுகள் விரைந்து வழங்கப்படவில்லை எனவும் சில சங்கங்களில் கோரிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

3) எனவே, அனைத்து களப்பணியாள்க்கு முதவி உயர்வுகள் வழங்கும்பொழுது கட்டாயமாக மேற்கண்ட வாரிய உத்தரவுகளின்படி தீர்விற்குரிய மாதத்தின் (Crucial Month) அடிப்படையில் காலி பணியிடங்கள் கணக்கிடப்பட்டு (Estimation of Vacancy) அதன் அடிப்படையில் தேர்வுப்பட்டியல் தயார் செய்து காலம் தாழ்த்தாமல் விரைந்து பதவி உயர்வுகள் ஒவ்வொரு வருடமும் உரிய காலவரையறைக்குள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிதீறது.

4) மேலும், மின்பாதை ஆய்வாளர் மற்றும் வணிக ஆய்வாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்கும்பட்சத்தில், வாரிய ஆணைப்படி குறும தேதியில் இரு பதவிகளுக்கும் ஒரே சமயத்தில் தகுதிகாண் அறிக்கை கோரப்பட்டு, தேர்வு பட்டியல் தயார் செய்து பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும். இரு பதவிகளில் ஏதேனும் ஒரு பதவியில் காலிப்பணியிடம் இல்லாதபட்சத்தில் அப்பதவிக்கு தேர்வு செய்யப்பட வேண்டிய பணியாளர்கள் எவரும் இல்லை என்று குறிப்பிட்டு அந்த வருடம் Nil Panel தயார் செய்து பதிவு செய்யப்பட வேண்டுடும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள
ஒப்பம்///நாள்: 05.04.2025
**கா. முத்துகிருஷ்ணன்**
பணித்தொகுதி அலுவலர்/செயலாக்கம்,
தலைமைப்பொறியாளர்/பணியமைப்புக்காக

## 22.02.2018 வேலைப்பளு ஒப்பந்தப்படி புதிதாக உருவாகியுள்ள பிரிவு அலுவலகங்களுக்கு பிரிவு அலுவலர் பதவி அனுமதிக்கும் உத்தரவு

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**(TN{DCL)**

Establishment - TNPDCL - Sanction of 61 posts of Assistant Engineer / Junior Engineer (Electrical) I Grade to the 61 Nos. of newly formed admissible O&M Distribution Sections as per the last Workload norms in various Distributions Circles - Orders issued.

---

**(ADMINISTRATIVE BRANCH)**

**(Per.) MD TNPDCL Proceedings No. 43** **Dated 09.04.2025**
Panguni-26, Krothi Varudam,
Thiruvalluvar Aandu 2056.

**READ:**

1) (Per). FB TANGEDCO Proceedings No. 8, (Sectt. Branch), dated 02.03.2018.
2) Note approved by the CMD/TNPDCL on 08.04.2025.

******

**PROCEEDINGS:**

Approval is hereby accorded for sanction of 61 posts of Assistant Engineer / Junior Engineer ( Electrical) I Grade to the 61 Nos. of newly formed admissible O&M Distribution Sections as per the revision of last workload norms (2018) in the following Distribution Circles:-

| Sl.No. | Name of the Circles | Name of the newly formed admissible Sections |
|---|---|---|
| 1. | Udumalpet EDC | 1) O&M / Pappankulam (R)<br>2) O&M / Kurichikottai (R)<br>3) O&M / Jothinagar (R)<br>4) O&M / Akilandapuram (R)<br>5) O&M Devanurpudur / North (R)<br>6) O&M / Kottur (R) |
| 2. | Salem EDC | 7) O&M Yercaud-II (H) |
| 3. | Namakal EDC | 8) O&M / Eranapuram (R)<br>9) O&M / Chandragiri (R)<br>10) O&M / Erumbhupalam (R)<br>11) O&M / T.Kailasapuram (R) |
| 4. | Mettur EDC | 12) O&M / Sathynagar (R)<br>13) O&M / Kamalapuram (R)<br>14) O&M / Thoppur (R)<br>15) O&M / K.R. Thoppur (R)<br>16) O&M / Tharamangalam (R)<br>17) O&M / Ettikuttaimedu (R)<br>18) O&M / Magudanchavadi/ East (R)<br>19) O&M / Pakkanadu (R) |

| | | |
|---|---|---|
| 5. | Dharmapuri EDC | 20) O&M / Venampatti (R) |
| 6. | Krishnagiri EDC | 21) O&M / Karnoor (U)<br>22) O&M / Varaganapally (H)<br>23) O&M / Andevanapally (H)<br>24) O&M / Kakkadasam (H)<br>25) O&M / Mudukurukki (H)<br>26) O&M / Kodamandapatty (R)<br>27) O&M / Chinnakothur (R)<br>28) O&M / Bynapally (R) |
| 7. | Tirupathur EDC | 29) O&M / Elagiri (H)<br>30) O&M / Kavaloor (H) |
| 8. | Villupuram EDC | 31) O&M / Nadukuppam (R)<br>32) O&M / Nallam (R)<br>33) O&M / Poothurai (U)<br>34) O&M / Kattrampakkam (U) |
| 9. | Cuddalore EDC | 35) O&M / B.Udaiyur (R)<br>36) O&M / T.Nedunchari (R)<br>37) O&M / Poothurai (U)<br>38) O&M / Mudhanai (R) |
| 10. | Kanchipuram EDC | 39) O&M / Toll Gate (U)<br>40) O&M / Collectorate (U)<br>41) O&M / Taluk Office (U)<br>42) O&M / Panruti (R)*<br>43) O&M / Pappanchatram (R)*<br>(*Sections transferred from Chengalpattu EDC) |
| 11. | Chengalpattu EDC | 44) O&M / Thaiyur (R)<br>45) O&M / SIDCO/Maraimalainagar (U)<br>46) O&M / Potheri (R)<br>47) O&M / Kayarambedu (R)<br>48) O&M / Nellikuppam (R)<br>49) O&M / Pudupakkam (R)<br>50) O&M / Gogulapuram (R)<br>51) O&M / Mannivakkam (R)<br>52) O&M / Navalur (R)<br>53) O&M / Velur (R)<br>54) O&M / Veerapuram (R)<br>55) O&M / P.V. Kalathur (R)<br>56) O&M / Poonchery (R) |
| 12. | Thiruvallur EDC | 57) O&M / Gudapakkam (R)<br>58) O&M / Prakash Nagar (R)<br>59) O&M / Veppampattur (R)<br>(Sections transferred from Chengalpattu EDC) |

| | | |
|---|---|---|
| 13. | Pudukottai EDC | 60) O&M / Komapuram (R)<br>61) O&M / Koiloor (R) |

2) Consequent to the santion of above posts, the following 127 posts continued in the following Distribution Circles are hereby surrendered with immediate effect:-

| Name of the Circle | Name of the posts be surrendered | No. of Posts |
|---|---|---|
| Villupuram EDC | Typist | 4 |
| | Watchman | 2 |
| Vellore EDC | Watchman | 3 |
| | Rota print operator | 2 |
| | Mechanic III/IV | 1 |
| | Water Carrier | 1 |
| | Vehicle Helper | 4 |
| | Machine man III | 1 |
| Tirupathur EDC | Watchman | 7 |
| Krishnagiri EDC | Typist | 9 |
| Udumalpet EDC | Typist | 4 |
| | Steno Typist | 1 |
| | Watchman | 4 |
| Palladam EDC | Watchman | 3 |
| Nilgiris EDEC | Typist | 5 |
| | Watchman | 2 |
| Tiruppur EDC | Typist | 4 |
| | Watchman | 5 |
| Salem EDC | Watchman | 15 |
| Namakkal EDC | Typist | 3 |
| | Watchman | 4 |
| Pudukottai EDC | Typist | 3 |
| | Watchman | 1 |
| Perambalur EDC | Typist | 3 |
| | Watchman | 3 |
| Trichy EDC/ Metro | Watchman | 7 |
| | Mazdoor | 1 |
| Tiruvannamalai EDC | Typist | 7 |
| | Watchman | 18 |
| | **Total** | **127** |

3) The concerned Superintending Engineers are directed to intimate the actual date of utilisation of the above sanctioned posts to this office promptly.

4) The expenditure is debit able to the following Head of Account.

"TANGEDCO Funds - Revenue Expenses - 40 - Employees Cost - 4030 Salries - 4030102 Salaries Proninicial & RWE - Employees Cost."

5) The receipt of the Proceedings shall be acknowledged.

**(By Order of the CMD/TPDCL)**

**M. AMBIGA**
Chief Engineer/ Personnel



## நான்மணிக்கடிகை பாடல். 33 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### பாடல் (33) புகைவித்தாய் பொங்கழல் தோன்றும்!

புகைவித்தாப் பொங்கழல் தோன்றுஞ் சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை - பகையொருவன்
முன்னம்வித் தாக முளைக்கும் முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

**சந்தி பிரித்து எழுதிய பாடல்:**

புகைவித்தாப் பொங்கு அழல் தோன்றும் சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை - பகையொருவன்
முன்னம் வித்தாக முளைக்கும் முளைத்த பின்
இன்னா விதது ஆகிவிடும்.

**கருத்துரை :**

ஓர் இடத்தில் புகை எழுதுகிற என்றால், அதற்கு அங்கு எரியும் நெருப்பு தான் வித்தாக (காரணமாக) இருக்கும்!

ஒருவன் முகமலர்ச்சியுடன் காணப்படுகிறான் என்றால், அதற்கு அவனது மன மகிழ்ச்சியே வித்தாக (காரணமாக) இருக்கும்!

ஒருவன் உள்ளத்தில் உள்ள பகையுணர்வு, வெளியே தெரிய அவனது குறிப்பான செயல்களே வித்தாக (காரணமாக) இருக்கும்! அதுபோல், அவனது பகைமை உணர்வுகளே அவனுக்கு வரக்கூடிய எல்லாத் துன்பங்களுக்கும் வித்தாக (காரணமாக) இருக்கும்!

**அருஞ்சொற்பொருள்:**

புகை வித்து ஆ = புகை எழுவதற்கு வித்தாக; பொங்கு அழல் = எரியும் நெருப்பு; தோன்றும் = காண்பவர்களுக்குத் தோன்றும்; சிறந்த நகை வித்து ஆ = மேலான முக மலர்ச்சிக்கு வித்தாக; உவகை தோன்றும் = மனதில் மகிழ்ச்சி தோன்றும்; பகை = உள்ளத்தின் பகைமை; ஒருவன் = ஒருவனது; முன்னம் வித்தாக = குறிப்புச் செயல்கள் காரணமாக; முளைக்கும் = வெளியே தெரியும்; முளைத்த பின் = தெரிந்தபின்; இன்னா = வரும் துன்பங்களுக்கு; வித்து ஆகிவிடும் = அதுவே காரணமாகிவிடும்.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 : 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

**குறிப்பு :** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# யார் பணக்காரன்? யார் ஏழை?

- சிவநாச்சியார்

இதென்ன கேள்வி?

பணம் நிறைய வைத்திருப்பவன் பணக்காரன்.

கஷ்டப்படுபவன் ஏழை.

அது தானே பதில்...? இந்த பதில் சரியா...?

## சம்பவம் -1

ஒரு பெரிய சீமாட்டி ஒரு புடவை வாங்க கடைக்கு செல்கிறாள். ''எனக்கு கொஞ்சம் பட்டுச்சேலைகள் காட்டுங்கள். விலை மலிவாக இருக்கட்டும்'' என்றாள்.

''என் மகனுக்கு திருமணம். என் வீட்டு வேலைக்காரிக்கு கொடுக்க வேண்டும்'' என்கிறாள்.

சேல்ஸ்கேர்ள் எடுத்து போட்ட புடவைகளில் மலிவானதாக ஒன்றை செலக்ட் செய்து பணத்தை கட்டிவிட்டு எடுத்துச் சென்றாள்.

சற்று நேரம் கழித்து அந்த சீமாட்டியின் வீட்டு வேலைக்காரி வருகிறாள். ''என் முதலாளியம்மா பையனுக்கு கல்யாணம். நல்ல சேலையா ஒன்னு அவங்களுக்கு (சீமாட்டிக்கு) எடுத்து கொடுக்கணும். விலை கொஞ்சம் கூட இருந்தாலும் பரவாயில்லை. நல்ல டிசைன்ஸ் எடுத்துப் போடுங்க'' என்றாள்.

## சம்பவம் - 2

ஒரு பெரிய இடத்துப் பெண், ஒருமுறை பிக்னிக்கிற்கு சென்ற இடத்தில் ஒரு ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருந்தாள். அவளது கைக்குழந்தை திடீரென பாலுக்காக அழ, ஹோட்டல் நிர்வாகத்திடம் ''குழந்தைக்கு பால் கிடைக்குமா?'' என்றாள் .

''எஸ் மேடம்... கிடைக்கும். ஒரு கப் நூறு ரூபாய் ஆகும் '' என்று பதில் வந்தது .

''பரவாயில்லை... உடனே ஒரு கப் வேண்டும்'' என்று கூறி ஆர்டர் செய்து பாலை வரவழைத்தாள்.

அவள் ஊருக்கு திரும்பிப் போகும்போது வழியில் மறுபடியும் குழந்தை பாலுக்காக அழ, சாலையோரம் இருந்த ஒரு டீக்கடையில் காரை நிறுத்தி, பால் கிடைக்குமா என்று விசாரித்தாள்.

''பசும்பாலே இருக்கும்மா!'' என்று கூறி அக்கடைக்காரர், பசும்பால் கொடுத்தார்.

''ரொம்ப தேங்க்ஸ்பா... எவ்ளோ ஆச்சு?''

''பணம் வேண்டாம்மா... குழந்தைங்க குடிக்கிற பாலுக்கு நான் காசு வாங்குறதில்லை'' என்று பதில் சொன்னவர், ''இன்னும் வேணும்னாலும் வாங்கிக்கோங்க. போற வழியில குழந்தை அழுதா என்ன பண்ணுவீங்க?'' என்றார் பரிவுடன்.

## சம்பவம் - 3

அலுவலகத்துக்கு புறப்படும்போது தான் அந்த இளைஞன் கவனித்தான்.

செருப்பு பிய்ந்துபோயிருந்தது. பிரதான சாலை வந்ததும் அந்த செருப்பை தைக்க செருப்பு தைப்பவரை தேடிச் சென்றான்.

ஒரு நபர் சாலையோரம் ஒரு குடைக்கு கீழே செருப்புக்களை தைத்தபடி அமர்ந்திருந்தார்.

வண்டியை அவர் முன் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, செருப்பை அவர் முன் போட்டவன், ''இதை கொஞ்சம் தைச்சு கொடுங்க'' என்றான்.

''புது செருப்பு, எப்படி? பிஞ்சதுன்னு தெரியலே. எவ்ளோப்பா ஆகும்?'' என்றான். செருப்பை வாங்கி ஆராய்ந்த அந்த தொழிலாளி, ''இருபது ரூபாய் ஆகும் சார்'' என்றார். ''இருபது ரூபாயா! பத்து ரூபாய் வாங்கிக்கோங்க.'' என்றான் அந்த இளைஞன். சற்று தலையை நிமிர்த்தி பார்த்தார் அந்த செருப்பு தைப்பவர்.

கதிரவனின் கதிர்கள் சுட்டெரித்தது. சரியாக பார்க்க முடியவில்லை. ''இருபதுக்கு கம்மி தைக்க முடியாது சார்'' என்றார். ''என்ன இதுக்கு போய் இருபது ரூபாயா? பதினைஞ்சு வாங்கிக்கோங்க'' என்றான். ''நான் கம்மியாத் தான் சொல்லியிருக்கேன் சார்'' என்றார் செருப்பு தைப்பவர்.

''சொல்யூஷன் போட்டு ஒட்டி தைக்கணும். அப்போ தான் தையல் நிக்கும்.'' இளைஞனின் பேரம் தொடர்ந்து கொண்டிருந்தது.

இதனிடையே, டீ ஆர்டர் எடுக்க பக்கத்து டீக்கடை சிறுவன் வந்தான். ''ஒரு டீ கொண்டு வாப்பா. சார் டீ சாப்பிடுறீங்களா?'' அந்த இளைஞனின் பதிலுக்கு காத்திராமல், ''சாருக்கும் ஒரு டீ சேர்த்து ரெண்டு டீ கொண்டுவாப்பா'' என்றார்.

''இல்லை ஐயா வேண்டாம்'' என்றான் அந்த இளைஞன். ''பரவாயில்லை சார்... சாப்பிடுங்க... நல்லா இருக்கும்'' என்றார்.

இந்த ஏரியாவுல முப்பது வருஷமா இருக்குற கடை அது. சற்று நேரத்தில் சூடான டீ வந்தது. அந்தப் பெரியவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய அந்த இளைஞன் நெளிந்தபடி அந்த டீயை அருந்தினான்.

செருப்பு தைத்து முடித்த பிறகு, பைசா கொடுக்கும்போது சாப்பிட்ட டீக்கும் சேர்த்து தர, அந்த பெரியவர் சொன்னார் ... ''செருப்பு தைச்சதுக்கு மட்டும் காசு கொடுங்க. டீக்கு வேண்டாம். என்னோட கஸ்டமர் நீங்க. உங்களை உபசரிக்கிறது என்னோட கடமை'' என்றார்.

இங்கு யார் பணக்காரர்?

காரில் வந்து விலை குறைந்த புடவையை வாங்கிச் சென்ற அந்த சீமாட்டியா? அல்லது நடந்து வந்து விலை உயர்ந்த புடவையை தனது எஜமானிக்காக (சீமாட்டிக்காக) வாங்கிச் சென்ற அவள் வீட்டு வேலைக்காரியா? குழந்தையின் பாலுக்கு கூட அநியாய விலை வைத்த அந்த ஸ்டார் ஹோட்டல் மேனஜரா? அல்லது குழந்தைக்கு கொடுக்கும் பாலுக்கு பணம் வேண்டாம் என்று சொன்ன அந்த சாலையோர டீக்கடைக்காரரா?

செருப்பு தைப்பவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய பைக்கில் வந்த இளைஞரா? அல்லது டீ -யை அவருக்கு கொடுத்து உபசரித்த செருப்பு தைப்பவரா?

பணக்காரன், ஏழை குறித்த தவறான மதிப்பீடுகள் (WRONG DEFINITION) ஆண்டாண்டு காலமாக நமது சிந்தனையில் ஊறிப்போயிருக்கிறது.

நம்மால் இந்த உலகை மாற்றமுடியுமா? என்றால் விடை தெரியாது.

மாறாக மாற்றம் ஒவ்வொருவரின் மனதில் வர வேண்டும்.

மாற்றம் நம் மனதில் உண்டால் உலகம் தானாக மாறும்.

பணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒருவர் பணக்காராகிவிட முடியாது. அதே நேரம், பணம் இல்லாததால் ஒருவர் ஏழையும் கிடையாது.

இன்றைய காலகட்டத்தில் பணத்திற்கான ஓட்டத்தில் பல நேரங்களில் மனிதர்களை பொருட்படுத்துவதில்லை. அதனால் பணத்தை பெரிதாக கருதாத இதயங்களை கவனிக்க நாம் மறந்துவிடுகிறோம்.

தேவையுள்ளவர்களுக்கு பிரதிபலன் எதிர்பார்க்காமல் நம்மால் முடிந்தவரை உதவுவோம்.

அது தரும் மனநிறைவை பணம் நிச்சயம் தரமுடியாது!

## மின்கழகத்தில் பிரிவு 1&2ல் பணியாற்றுபவர்கள்/ஓய்வு பெற்றவர்கள் ஊதிய ஏற்றத்தாழ்வை சரிசெய்திட குழு அமைத்து வாரிய ஆணை:

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**TNPDCL**

**(ABSTRACT)**

Establishment - TNPDCL - Class I & II Service - Scructinization of the pay anomaly and pay refixation proposals - Constitution of a Committee - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Per) CMD TNPDCL Proceedings No. 52** **Dated 6th December, 2024**
Karthigai - 21,
Thiruvalluvar Aandu-2055

**Read:**

1. Board's Memo. No.027939-C1/88-1, (SB) dated: 08.05.1988.
2. B.P.Ms.(Ch) No.162 (SB) dated: 10.06.1988.
3. (Per) B.P (Ch) No.119 (SB) dated: 18.05.1993.
4. Board's Memo. No.30229/A4/A41/2018-1, dated: 23.05.2018.
5. Board's Memo. No.56545/A4/A41/2019-1, dated: 22.01.2020.

**PROCEEDINGS:**

In the Board's Memorandum first read above, the conditions for rectification of pay anomaly and the circumstances where the pay anomaly could not be rectified have been prescribed. In the reference second read above, earlier a Pay anomaly committee was constituted to study the case of rectification of pay anomaly dealt with at the Head quarters level and subsequently as per the Board's Proceedings third read above the said committee was abolished and the Competent Authorities to order for rectification of pay anomaly were also prescribed from class I to class IV officials/Employees.

2. In the Board's Memorandum fourth read above, instructions were issued for submission of the pay anomaly proposals by the Officers/Employees including the retired persons in a complete shape with required particulars, since the pay anomaly proposals were received from the field offices without proper scrutinisation and with relevant particulars. Further, in the Boar's Memorandum fifth read above, instructions were issued to furnish the pay anomaly proposals in a new format with individual application and comparative statement as prescribed by the Government, so as to verify the correctness of the pay particulars.

3. Of late, it is observed that pay anomaly is being claimed by the Officers/Employees for 10 to 15 years back period, even by the retires officials, since there is no time limit prescribed for claiming pay anomaly and also it is observed that thousands/Lakh of rupees are being claimed as arrears and paid to each individual, which involves additional financial commitment to the Corporation. In view of the involvement of huge financial commitment, it has been suggested to constitute a committee comprising of the Members from the Accounts Branch, Secretariat Branch, Administrative Branch and Audit Branch to analyze the pay anomaly and pay re&fixation proposals in respect of Class I and II Officers submitted by the Secretariat Branch and to recommend

to the Competent Authority for sanction and also to fix a timeline for submission of pay anomaly proposals, The suggestion has been accepted and approved by the Chairman and Managing Director/TNPDCL.

4. Accordingly, it is herby ordered that a Committee be constituted comprising the following Members to analyse the pay anomaly and pay re-fixation proposals in respect of class I and II Officers of Tamil Nadu Power Distribution Corporation Limited. Tamil Nadu Power Generation Corporation Limited, Tamil Nadu Green Energy corporation Limited and Tamil Nadu Transmission Corporation Limited and to recommend to the Competent Authority for consideration:-

1. Financial Controller/Cost/Accounts Branch.
2. Deputy Secretary/Personnel/Secretariat Branch.
3. Senior Deputy chief Internal Audit Officer/Pension/Audit Branch.
4. Senior Personnel Officer/Recruitment/Administrative Branch.

The under Secretary/Wage Revision & Regulations, secretariat Branch shall be the convener of the committee. The committee meeting shall be convened once in a week on the dated convenient to the Members of the Committee, so as to analyze the proposal on an ongoing basis, The recommendation of the Committee will be placed before the Competent Authority concerned for approval. The Committee shall also study and recommend a time line for submission of pay anomaly proposals by the Officers/Employees.

**K. NANTHAKUMAR**
CHARIMAN AND MANAGING DIRECTOR

## ஊதிய முரண்பாடு பிரிவு 3&4 (Provincial) - கமிட்டி அவர்களின் உத்தரவு

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**TNPDCL**

**(ABSTRACT)**

Establishment - TNPDCL - Class III & IV Service (Provincial Cadre) - Scrutinization of the pay anomally proposals - Constitution of a Committee - Orderrs - Issued.

---

**(Administrative Branch)**

**(Per) MD TNPDCL Proceedings No. 16** **Dated 18.02.2025**

Maasi - 06,
Thiruvalluvar Aandu-2055-2056
Kurothi Varudam,

**Read:**

1. Board's Memo. No.027939-C1/88-1, (SB) dated 08.05.1988.
2. B.P.Ms. (Ch) No.162 (SB) dated 10.06.1988.
3. (Per.) B.P (ch) No.119 (SB) dated 18.05.1993.
4. Board's Memo. No.30229/A4/A41/2018-1, dated 23.05.2018.
5. Board's Memo. No.56545/A4/A41/2019-1, dated 22.01.2020.

**PROCEEDINGS:**

In the Board's Memorandum first read above, the conditions for rectification of pay anomaly and the circumstances where the pay anomaly could not be rectified have been prescribed. In the reference second read above, earlier a Pay anomaly committee was constituted to study the case of rectification of pay anomaly dealt with at the Head quarters level and subsequently as per the Board's Proceedings third read above the said committee was abolished and the Competent Authorities to order for rectification of pay anomaly were also prescribed from Class I to Class IV Officials/Employees.

2. In the Board's Memorandum fourth read above, Instructions were issued for submission of the pay anomaly proposals by the Officiers/Employees including the retired persons in a complete shape with required particulars, since the pay anomaly proposals were received from the field offices without proper scrutinisation and with relevant particulars. Further, In the Board's Memorandum fifth read above, instructions were issued to furnish the pay anomaly proposals in a new format with individual application and comparative statement as prescribed by the Government, so as to verify the correctness of the pay particulars.

3. Of late, it is observed that pay anomaly is being claimed by the Officers/Employees for 10 to 15 years back period, even by the retired officials, since there is no time limit prescribed for claiming pay anomaly and also it is observed that Thousand/Lakh of rupees are being claimed as arrears and paid to each individual, which involves additional financial commitment to the Corporation. In view of the involvement of huge financial commitment, it has been suggested to constitute a committee comprising of the members from the Administrative Branch and Audit Branch to analyze the pay anomaly proposals in respect of Provincial Cadre in Class III and IV Employees submitted by the Administrative Branch and to recommend the Competent Authority for sanction. The suggestion has been accepted and approved by the Chairman and Managing Director/TNPDCL.

4. Accordingly, it is hereby ordered that a Committee be constituted comprising the following Members to analyze the Pay Anomaly proposals in respect of Provincial Cadre in Class III and IV Employees of Tamil Nadu Power Distribution Corporation Limited, Tamil Nadu Power Generation Corporation Limited, Tamil Nadu Green Energy Corporation Limited and Tamil Nadu Transmission Corporation Limited and to recommend to the Competent Authority for consideration:-

1. The Personnel Officer/Implementation/Adm.Branch.
2. The Deputy Chief Internal Audit Officer/Internal Audit Cell/Audit Branch.
3. The Assistant Personnel Officer/General/Adm.Branch.

5. The Assistant Personnel Officer/Pay Anomaly will be the convener of the committee and the committee meeting shall be convened once in a month on the date convenient to the Members of the Committee, so as to analyze the proposals on an ongoing basis. The recommendation of the Committee will be placed before the Competent Authority concerned for approval.

6. The receipt of the proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN AND MANAGING DIRECTOR/TNPDCL)**

**M. SUDARSAN**
**CHIEF ENGINEER/PERSONNEL**

# முதுமை வேறு... முதிர்ச்சி வேறு!

இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே மாதிரிப் பார்க்கும் பக்குவமான மனம் இருந்தால், அதைத்தான் ‘முதிர்ச்சி’ என்கிறோம். சிலருக்கு அது 20 வயதில்கூட வந்துவிடும். சிலருக்கு 80 வயது வரை முதிர்ச்சி வராமலே போகலாம். தான் முதிர்ச்சி அடைந்திருப்பதை ஒருவர் எப்படி உணர முடியும்?

- ✰ யாரைப் பற்றியாவது யாரோ வம்பு பேசுவதைக் கேட்க அலுப்பாக இருக்கும். இதில் ஏன் நேரத்தை வீணடிக்க வேண்டும் என்று தோன்றும்.
- ✰ அம்மாவோ, மனைவியோ, நெருங்கிய உறவுகளோ போன் செய்யும்போது எரிச்சல் வராது. போனை எடுத்து அன்புடன் பேசமுடியும்.
- ✰ தான் பேசுவதைக் குறைத்து, அடுத்தவர்கள் பேசுவதைக் கேட்கத் தோன்றும்.
- ✰ எல்லாம் தெரிந்ததுபோலப் பேசமாட்டார்கள். ‘‘ஆமாம். இது எனக்குத் தெரியாது’’ எனத் தயங்காமல் ஒப்புக் கொள்வார்கள்.
- ✰ நண்பர்களை எதற்காகவும் விட்டுக் கொடுக்காமல் பேசுவார்கள். அவர்களைக் கொண்டாடவும் செய்வார்கள்.
- ✰ பிரச்னைகளைக் கண்டு ஒதுங்காமல், ஏதேதோ காரணங்கள் சொல்லித் தட்டிக் கழிக்காமல் நேரடியாக எதிர்கொள்வார்கள்.
- ✰ தங்கள் நேரத்தை வீணடிக்கும் மனிதர்களைச் சாமர்த்தியமாக ஒதுக்கக் கற்றிருப்பார்கள்.
- ✰ தன்னுடைய மகிழ்ச்சி மற்றவர்கள் கையில் இல்லை. அது தன் மனதில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்திருப்பார்கள்.
- ✰ அடுத்தவர்களை நேசிப்பதுபோலத் தங்களையும் நேசிப்பார்கள். ஒன்றுமில்லாத விஷயங்களுக்காகத் தங்களை வருத்திக் கொள்ளமாட்டார்கள்.
- ✰ தேவையற்ற வாக்குவாதங்களையும் சண்டைகளையும் புறக்கணித்துவிட்டு, மௌனமாக அந்தச் சூழலைக் கடந்து போய்விடுவார்கள்.
- ✰ யாரையும் வெறுமனே தோற்றத்தை வைத்தும் பேச்சை வைத்தும் எடை போடமாட்டார்கள்.
- ✰ யார் மீதும் தங்கள் கருத்தை வலிந்து திணிக்கமாட்டார்கள். மாற்றுக் கருத்து வைத்திருக்க அடுத்தவர்களுக்கு உரிமை உள்ளுது என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.
- ✰ அடுத்தவர்களின் தவறுகளை மறக்கவும், அதைவிட அதிகமாக மன்னிக்கவும் கற்றிருப்பார்கள்!

- நன்றி

**முதுமை எனும் பூங்காற்று**

அக்டோபர் 2024




UTUC
TNEBREOS
TNEBEF
UTUC
TNEBREOS






TNEBREOS
TNEBEF
UTUC
TNEBREOS






அன்னை
தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ்
பதிவு எண்: 3600/CNI
இணைப்பு : UTUC
TNEBEF
நெல்லை மண்டல சிறப்புக்

Registered with Registrar of News Papers for India RNI No. TNBIL/2018/76375 (R.Dis No. 599/2018)
Postal Registration No. TN/ARD/106/2024-2026, WPP Licence No. : TN/PMG(CCR)/WPP/607/2024-2026
Posted at Egmore RMS (Patrika Channel) Date of Publishing Second week of every month
Posted on 15-17th of every month - Posted on 17.04.2025






















Printed by D.Babu, Published by A.Sekkizhar on behalf of Tamil Nadu Electricity Board Employees Federation
39/101 Singanna Street, Chintadripet, Chennai 600002
and Printed at Sri Raj Cine Printers No.177/72, Singanna Street, Chintadripet, Chennai 600002.
**Editor : A. SEKKIZHAR**